# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## *2007 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, லியோ மற்றும் ஜொசபின் த அல்மெய்டா நினைவு மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டம்*

---

*(2007 ஆம் ஆண்டு மே மாதம் 08 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---


*2007, மே மாதம் 11 ஆந் தேதிய* ***இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்*** *II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது*

*கொழும்பு 1, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக் கொள்ளலாம்*

**விலை : ரூபா 9.25** **தபாற் செலவு : ரூபா 5.00**

## 2007 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, லியோ மற்றும் ஜொசபின் த அல்மெய்டா நினைவு மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டம்

[2007 ஆம் ஆண்டு மே மாதம் 08 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.]

ச. வ.- ஓ. (கூட்) 17/2005

### லியோ மற்றும் ஜொசபின் த அல்மெய்டா நினைவு மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்

முன்னுரை.

"லியோ மற்றும் ஜொசபின் த அல்மெய்டா நினைவு மன்றம்" என அழைக்கப்படுவதும் அறியப்படுவதுமான சங்கமொன்று, அதன் உறுப்பினர்களால் இணங்கிக்கொள்ளப்பட்ட விதிகளுக்கிணங்கச் சொல்லப்பட்ட மன்றத்தின் எல்லாக் கருமங்களையும் பயனுற நிறைவேற்றிக் கொண்டுநடாத்தும் நோக்கத்துக்கென இதற்கு முன்னர் தாபிக்கப்பட்டிருந்ததாலும் :

அத்துடன் சொல்லப்பட்ட மன்றமானது எந்தப் பல்வேறு குறிக்கோள்களுக்காகவும், கருமங்களுக்காகவும் உருவாக்கப் பட்டதோ அந்தப் பல்வேறு குறிக்கோள்களையும், கருமங்களையும் இதுவரை வெற்றிகரமாக நிறைவேற்றியும், கொண்டுநடாத்தியும் வந்துள்ளதாதலாலும், அது கூட்டிணைக்கப்பட விண்ணப்பித் துள்ளதாதலாலும், அவ்விண்ணப்பத்தை அனுமதித்தல் பொது மக்கள் நன்மைக்காகவிருக்குமாதலாலும் :

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத் தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

சுருக்கப் பெயர்.

**1.** இச்சட்டம், 2007 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, லியோ மற்றும் ஜொசபின் த அல்மெய்டா நினைவு மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

லியோ மற்றும் ஜொசபின் த அல்மெய்டா நினைவு மன்றத்தைக் கூட்டிணைத்தல்.

**2.** இச்சட்டம் தொடங்கும் திகதியிலிருந்தும் அதன் பின்னரும், (இதனகத்துப் பின்னர் "மன்றம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) லியோ மற்றும் ஜொசபின் த அல்மெய்டா நினைவு மன்றத்தில் தற்போதைய உறுப்பினர்களாக அல்லது இத்தால் அமைக்கப் படும் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களாக இதன்பின்னர் சேர்த் துக்கொள்ளப்படும். அத்தகையோரான அத்தனை ஆட்களும் (இதனகத்துப் பின்னர் "கூட்டுத்தாபனம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) "லியோ மற்றும் ஜொசபின் த அல்மெய்டா நினைவு மன்றம்" என்னும் பெயர் மகுடத்தின் கீழ் இடையறாவழியுரிமை

கொண்ட கூட்டிணைக்கப்பட்ட ஒரு குழுவாக இருத்தல் வேண்டும். அத்துடன் அப்பெயர் கொண்டு எல்லா நீதிமன்றங்களிலும் அது வழக்குத் தொடரலாமென்பதுடன் அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும்படலாம். பொது இலச்சினையொன்றை வைத்திருக்கவும் பயன்படுத்தவும் அது விரும்பியாங்கு அந்த இலச்சினையை மாற்றவும் முழுத்தத்துவமும் அதிகாரமும் உடையாகவிருத்தலும் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிக்கோள்கள்.

**3.** கூட்டுத்தாபனம் அமைக்கப்படுவதற்கான பொதுக் குறிக்கோள்கள் பின்வருமாறு இருத்தல் வேண்டுமென இத்தால் வெளிப்படுத்தப்படுகிறது :-

(அ) முதியோருக்கான இல்லங்களைத் தாபித்தல், கைவிடப்பட்ட அல்லது தேவையிலுள்ள முதியோருக்கான கவனிப்புக்கு ஏற்பாடு செய்தல் அத்துடன் அவர்களின் உடல்ரீதியான, உளரீதியான மற்றும் அறிவாற்றல் சார்ந்த தேவைகளுக்கு ஏற்பாடு செய்தல், அவர்கள் சமூக, சமய மற்றும் பொழுதுபோக்கு நடவடிக்கைகளில் பங்குபற்றுவதற்கான வாய்ப்புக்களை அவர்களுக்கு வழங்குதல் ;

(ஆ) முதியோருக்கும் கைவிடப்பட்டோருக்குமான இல்லங்களையும் நோயுற்றவர்களையும், இயலாதவர்களையும், அங்கவீனர்களையும் பராமரிப்பதற்கான வைத்திய சாலைகளையும் தாபித்தலும், பராமரித்தலும் ;

(இ) தேவைப்படும் மக்களுக்குக் கல்விச் சேவைகளையும் தொழிற்பயிற்சிகளையும் வழங்குதல் ;

(ஈ) அங்கவீனர்களாயுள்ள ஆட்கள் இயன்றவரை இயல்பான ஒரு வாழ்க்கையை நடத்துவதற்கு நிலையங்களைத் தாபித்தலும், பராமரித்தலும் ;

(உ) வேறுவகையில் கல்வி, சமூக மற்றும் பிற தருமச்சேவைகளை ஆற்றுதல் ;

(ஊ) மாணவர்களுக்காக இரவல் வழங்குகின்ற மற்றும் குறிப்பிட்டு வசதிகளைக் கொண்ட நூலகங்களைத் தாபித்தலும், வயதுவந்த குடிசனத்தினர் மத்தியில் வாசிக்கும் பழக்கத்தை ஊக்குவித்தலும் ;

(எ) பொதுப்பரீட்சைகளில் வெற்றியடைகின்ற வறுமைப் பட்ட மாணவர்களுக்குப் புலமைப்பரிசில்களை வழங்குதல் ;

(ஏ) வறுமைப்பட்ட அனாதைகளுக்கும், நோயுற்றவர்களுக் கும் வைத்திய வசதிகள், உடை, உறைவிடம் என்பவற்றை வழங்குதல் ;

(ஐ) பார்வைக் குறைபாடுள்ளவர்களுக்கும், உடல்ரீதியான குறைபாடுள்ளவர்களுக்கும், மந்தபுத்தியுள்ளவர்களுக் கும், செவிப்புலன் பாதிக்கப்பட்டவர்களுக்கும் நலன்புரி வசதிகளை வழங்குதல் ;

(ஒ) சமூகத்தின் சமூகப் பொருளாதார, சமய மற்றும் கலாசாரத் தேவைகளை இனங்காணுதலும், அத்தகைய தேவைகளை நிறைவேற்றுவதற்கான பொருத்தமான கருத்திட்டங்களையும், நிகழ்ச்சித்திட்டங்களையும் வகுத்தமைத்தலும், செயற்படுத்தலும், அத்துடன் சமூகத்தின் பொதுவான நல்வாழ்வுக்கு உகந்த வேறு எவையேனும் கருத்திட்டங்களை மேற்கொள்ளுதலும் ;

(ஓ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றும் பொருட்டு கண்காட்சிகள், விரிவுரைகள், கருத்தரங்குகள், செயலமர்வுகள், வகுப்புகள், மாநாடுகள் என்பவற்றை ஊக்குவித்தல், ஏற்பாடு செய்தல், ஒழுங்கு செய்தல் மற்றும் நடத்துதல் ;

(ஔ) இலங்கையிலுள்ள எல்லாச் சமூகங்கள் மற்றும் மக்கள் மத்தியில் சமாதானத்தையும், நல்லெண்ணத்தையும், புரிந்துணர்வையும், ஒத்துழைப்பையும் ஊக்குவித்தல் ;

(க) பொருளாதாரரீதியாகவும், சமூகரீதியாகவும் அனுகூலமற்ற நிலையிலுள்ள இளம்வயதினர் மேம்படுத்தலை ஊக்குவித்தல் ;

(ங) கல்வியினதும், அறிவினதும் முன்னேற்றத்தை ஊக்குவித்தலும், சுற்றறிவாளர்களுக்கும், ஆராய்ச்சியாளர்களுக்கும், அங்கீகரிக்கப்பட்ட நிறுவகங்களுக்கும் அல்லது நிறுவனங்களுக்கும் புலமைப்பரிசில்களை, மானியங்களை அல்லது வேறுவகைகளில் நிதியுதவிகளை வழங்குதலும் ;

(ச) கலாசார, இலக்கிய மற்றும் தரும நடவடிக்கைகளை ஊக்குவித்தலும், அவற்றுக்கு உதவியாயிருத்தலும் ;

(ஞ) இளம் வயதினரின் அறிவை முன்னேற்றும் பொருட்டும், அவர்கள் தொழில் பெறுதலை இயலச் செய்யக்கூடியதாகவும், அவர்களுக்குப் பகிரங்க விரிவுரைகளையும், கருத்தரங்குகளையும், செயலமர்வு களையும், மாநாடுகளையும், விவாதங்களையும் குறுகியகாலக் கல்விநெறிகளையும் ஒழுங்குசெய்தலும் நடத்துதலும் ;

(ட) தேசிய மற்றும் சர்வதேச நலனுக்குரிய விடயங்களில் வெளியீடுகளை ஊக்குவித்தலும், அவற்றுக்கு உதவியாயிருத்தலும் ;

(ம) கல்வி நிறுவனங்கள், நூலகங்கள், அரும்பொருட் காட்சியகங்கள், வைத்தியசாலைகள் ஆகியவற்றைத் தாபித்தலும், பேணுதலும்.

கூட்டுத்தாபனத்தின் விதிகள்.

**4.** கூட்டுத்தாபனத்தின் அலுவல்கள் அப்போதைக்கு வலுவி லிருக்கும் கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கு அமைய அத்தகைய விதிகளுக்கு இணங்கத் தெரிவுசெய்யப்படும் கூட்டுத்தாபனத்தின் முகாமைக்குழு ஒன்றினால் நிருவகிக்கப்படல் வேண்டும். இச்சட் டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைய முகாமைக்குழுவானது பின்வரும் எல்லா விடயங்களும் அல்லது ஏதேனும் விடயம் தொடர்பில் விதிகளை ஆக்குதல் வேண்டும்.

(அ) கூட்டுத்தாபனத்தின் அலுவலர்களினதும் சேவை யாளர்களினதும் ஊதியம் உட்பட அவர்களின் சேவை நியதிகளும் நிபந்தனைகளும் ;

(ஆ) கூட்டுத்தாபனத்தின் அலுவலர்களினதும் சேவை யாளர்களினதும் ஆட்சேர்ப்புக்கான திட்டங்களும் அவர்களின் நியமனத்துக்கான நடைமுறைகளும் ;

(இ) கூட்டுத்தாபனத்தின் வருடாந்த நிகழ்ச்சித்திட்டம் மற் றும் வேலைத்திட்டம், வருடாந்த வரவு செலவுத் திட்டம், வருடாந்த அறிக்கையும் கணக்குகளும், அத்துடன் அத்தகைய நிகழ்ச்சித் திட்டம் மற்றும் வேலைத்திட்டம், வரவு செலவுத் திட்டம், அறிக்கையும் கணக்குகளும் தயாரிக்கப்பட வேண்டிய முறையும் ;

(ஈ) விதிகள் தேவைப்படுகின்ற அல்லது இச்சட்டத்தினால் ஆக்குவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட அத்தகைய வேறு விடயங்கள் தொடர்பில்.

கூட்டுத்தாபனத்தின் தத்துவங்கள்.

**5**. இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமையக் கூட்டுத்தாபனம் பின்வரும் தத்துவங்களைக் கொண்டிருத்தல் வேண்டும் :—

(அ) இச்சட்டத்தின்கீழ் அல்லது ஏதேனும் கொள்வனவு, மானியக்கொடை, கொடை, விருப்பாவணக் கையளிப்பு ஆகியவற்றின் பயனைக்கொண்டு அசைவுள்ள, அசைவற்ற ஏதேனும் ஆதனத்தைக் கையேற்பதற்கும் வைத்திருப்பதற்கும் அத்தகைய ஆதனம் தொடர்பான ஏதேனும் நம்பிக்கைப்பொறுப்புக்கு அமைய அதனை விற்பதற்கு, ஈடுவைப்பதற்கு , குத்தகைக்கு கொடுப்பதற்கு, கொடுத்து மாற்றுவதற்கு அல்லது வேறுவகையில் கையுதிர்ப்பதற்கு ;

(ஆ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்கு அவசியமானவையாகக்கூடிய அத்தகைய எல்லா ஒப்பந்தங்களையும் செய்வதற்கும் நிறைவேற்றுவதற்கும் ;

(இ) உள்நாட்டு அல்லது வெளிநாட்டு ஆட்களிடமிருந்து அல்லது நிறுவனங்களிடமிருந்து காசாக அல்லது பொருளாக அன்பளிப்புகளை, மானியக் கொடைகளை அல்லது நன்கொடைகளைப் பெற்றுக் கொள்வதற்கு அல்லது திரட்டுவதற்கு ;

(ஈ) நாணயமாற்று உண்டியல்கள், காசோலைகள், வாக்குறுதிப் பத்திரங்கள், ஏனைய கைமாற்றுச் சாதனங்கள் ஆகியவற்றை ஆக்குவதற்கு, வரைவதற்கு, ஏற்றுக் கொள்வதற்கு, கழிப்பனவு செய்வதற்கு, புறக்குறிப்பிடுவதற்கு, மாற்றுவதற்கு, கொள்வனவு செய்வதற்கு, விற்பனை செய்வதற்கு, வழங்குவதற்கு அத்துடன் ஏதேனும் வங்கியில் அல்லது வங்கிகளில் நடைமுறை, சேமிப்பு மற்றும் வைப்புக் கணக்குகளைத் திறப்பதற்கும் பேணி வருவதற்கும் ;

(உ) அதன் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்கு அவசியமான பணங்களைப் பிணையுடனோ பிணையின்றியோ கடனெடுப்பதற்கு ;

(ஊ) பிரயோகிக்கப்படாத ஏதேனும் வருமானம் உட்படக் கூட்டுத்தாபனத்துக்குச் சொந்தமான ஏதேனும் பணங்களை முகாமைக்குழு தீர்மானிக்கின்றவாறாக முதலிடுவதற்கு ;

(எ) அதன் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்கு அவசியமாகக் கூடியவாறான அத்தகைய அலுவலர்களையும் சேவையாளர்களையும் நியமிப்பதற்கு ; அத்துடன்

(ஏ) கூட்டுத்தாபனத்தின் செயற்பாடு தொடர்பான எல்லா விடயங்களிலும் இச்சட்டத்தினதும் வேறேதேனும் எழுத்திலான சட்டத்தினதும் ஏற்பாடுகளுடன் ஒவ்வாதனவாகவிராத அத்தகைய விதிகளை ஆக்குவதற்கும் அவற்றைத் திருத்துவதற்கு, மாற்றுவதற்கு அல்லது நீக்குவதற்கும்.

*கூட்டுத்தாபனத்தின் நிதியம்.*

**6.** (1) கூட்டுத்தாபனம் அதன் சொந்த நிதியத்தைக் கொண்டிருத்தல் வேண்டும். (இதனகத்துப்பின்னர் "நிதியம்" என அழைக்கப்படுவதுடன் குறிப்பிடவும்படும்).

(2) (அ) இச்சட்டத்தின்கீழ் அதன் தத்துவங்களை, செயற்பாடுகளை மற்றும் கடமைகளைப் பிரயோகித்தலிலும் செய்து முடித்தலிலும் செயல் நிறைவேற்றுதலிலும் கூட்டுத்தாபனத்துக்குக் கிடைக்கப்பெறக்கூடிய அத்தகைய பணத்தொகைகள் எல்லாம் ; அத்துடன்

(ஆ) இலங்கையிலுள்ள அல்லது வெளிநாட்டிலுள்ள ஏதேனும் மூலத்திலிருந்து கடன்கள், நன்கொடைகள், அன்பளிப்புகள் அல்லது மானியக்கொடைகள் என்ற வகையில் கூட்டுத்தாபனத்துக்குக் கிடைக்கப்பெறக்கூடிய அத்தகைய பணத்தொகைகள் எல்லாம்,

அந்நிதியத்தில் வரவு வைக்கப்படல் வேண்டும்.

(3) (அ) இச்சட்டத்தின்கீழ் அதன் தத்துவங்களை, செயற்பாடுகளை மற்றும் கடமைகளைப் பிரயோகித்தலிலும் செய்து முடித்தலிலும் செயல் நிறைவேற்றுதலிலும் கூட்டுத்தாபனத்தால் உறப்பட்ட ஏதேனும் செலவினத்தைக் கொடுத்துத் தீர்ப்பதற்குத் தேவைப்படுகின்ற வாறான அத்தகைய பணத்தொகைகள் எல்லாம் ; அத்துடன்

(ஆ) இச்சட்டத்தினால் அல்லது இதன்கீழ் அத்தகைய நிதியத்திலிருந்து செலுத்தப்பட வேண்டியவாறான அத்தகைய பணத்தொகைகள் எல்லாம்,

கூட்டுத்தாபனத்தின் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

*சபை முறையான கணக்குப் புத்தகங்களை வைத்திருக்கச் செய்வித்தல்.*

**7.** (1) முகாமைக் குழு கூட்டுத்தாபனத்தின் வருமானமும் செலவினமும், சொத்துக்களும் பொறுப்புக்களும் மற்றும் ஏனைய எல்லாக் கொடுக்கல் வாங்கல்களும் பற்றிய முறையான கணக்குப் புத்தகங்களை வைத்திருக்கச் செய்வித்தல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனத்தின் நிதியாண்டு பஞ்சாங்க ஆண்டாக விருத்தல் வேண்டும்.

(3) கூட்டுத்தாபனத்தின் கணக்குகள் ஒரு தகைமைபெற்ற கணக்காய்வாளரினால் கணக்காய்வு செய்யப்படல் வேண்டும்.

(4) இச்சட்டத்தில், சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப்படுத்தினாலன்றி, தகைமைபெற்ற கணக்காய்வாளர் என்பது அரசியலமைப் பின் 154(8) ஆம் உறுப்புரையின் அதே கருத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தின் இலச்சினை.*

**8.** கூட்டுத்தாபனத்தின் இலச்சினையானது –

(அ) முகாமைக்குழு காலத்துக்குக் காலம் தீர்மானிக்கப்படக் கூடியவாறான அத்தகைய ஆளின் கட்டுக்காப்பில் இருத்தல் வேண்டும் ;

(ஆ) முகாமைக்குழுவால் தீர்மானிக்கப்படக்கூடிய அத்தகைய முறையில் மாற்றப்படலாம் ;

(இ) முகாமைச் சபையின் ஒப்புதலுடனும் முகாமைக் குழுவின் இரு உறுப்பினர்கள் தாம் சமுகமாயிருந்தமைக்கு அடையாளமாக ஆவணத்தில் கையொப்பமிடுகின்றவர்களாக அவர்கள் முன்னிலையிலன்றி எந்தவொரு ஆவணத்திலும் பொறிக்கப்படலாகாது.

கலைப்பின்போது எஞ்சியுள்ள ஆதனம்.

**9.** கூட்டுத்தாபனம் கலைக்கப்பட்டதன்மேல் அதன் கடன்கள், பொறுப்புகள் அனைத்தையும் திருப்திப்படுத்திய பின்னர் ஏதாவது சொத்து எஞ்சியிருந்தால் அத்தகைய சொத்து கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களிடையே பகிர்ந்தளிக்கப்படலாகாது. ஆனால், அது கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களையொத்த குறிக்கோள்களைக் கொண்டிருக்கும் பிற நிறுவனம் அல்லது நிறுவனங்கள் சிலவற்றுக்கு அந்நிறுவனத்தின் அல்லது அந்நிறுவனங்களின் உறுப்பினர்களிடையே ஏதாவது வருமானத்தை அல்லது சொத்தை பகிர்ந்தளிப்பதிலிருந்து அதன் விதிகள்மூலம் தடுக்கப்பட்டிருப்பின் கொடுத்தல் வேண்டும் அல்லது கைமாற்றுதல் வேண்டும். கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்கள் கூட்டுத்தாபனத்தைக் கலைக்கும் நேரத்தில் அல்லது அதனைக் கலைக்கும் முன்னர் அத்தகைய நிறுவனத்தை அல்லது நிறுவனங்களைத் தீர்மானித்தல் வேண்டும்.

குடியரசினதும் மறுபேரினதும் உரிமைகளைப் பேணுதல்.

**10.** இச்சட்டத்தில் அடங்கியுள்ளதெதுவும், குடியரசின் உரிமைகளையேனும், ஏதேனும் அரசியல் அல்லது கூட்டிணைக்கப்பட்ட குழுவின் உரிமைகளையேனும், வேறு எவரேனும் ஆட்களின் உரிமைகளையேனும் பங்கப்படுத்துத்தலோ அல்லது பாதித்தலோ ஆகாது.

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

**11.** இச்சட்டத்தின் சிங்கள உரைக்கும், தமிழ் உரைக்கும் இடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, பொல்ஹேன்கொடை வீதி, கிருளபனை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்